டது. அந்த முயற்சிக்கு உதவியாக அவர்களுக்குப் பட்டா வழங்கப்படாத காரணத்தினால் அவர்களுக்கு காலனி கட்டித்தர முடியவில்லை. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே அதுபற்றித் தெரியும். அந்த அமைச்சர் அவர்களுக்கு மீனவர்களைப் பற்றியும் தெரியும். அமைச்சர் அவர்களுக்கு இரண்டு தகுதியும் இருக்கிற காரணத்தால் அந்த அரிசனங்களுக்கு அந்த இடத்தில் பட்டா வழங்கி வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்ய அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மனைப்பட்டா பெற்ற எவரும் பட்டா பெற்றுக்கொண்ட இடங்களில் குடியேறவில்லை. வீட்டுமனை இல்லாமல் 8 உபரிக் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. தற்சமயம் பரம்பரையாக அவர்கள் குடியிருக்கும் கோயில் நிலத்தில் அனுபவப்பட்டா வழங்கி, அங்கே கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 47 குடும்பங்கள் புல எண். 136-ஏ நத்தம் புறம்போக்கு மனைப்பட்டா பெற்றுள்ளன. உபரியாக இருக்கிற 8 குடும்பங்களுக்கு மட்டும் நில எடுப்பின் மூலம் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதே நேரத்தில் மொத்த நபர்களுக்கும் விரைவாகப் பட்டா வழங்கி, அங்கே பக்கத்தில் கூட காலி இடங்கள் இருக்கின்றன, அங்கே பட்டா வழங்கி, காலனிபோல வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முயற்சி எடுக்க வேண்டும். இதில் நீண்ட விளக்கம் தேவையென்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் திரு. சந்திரசேகரன் அவர்களைக் கேட்டால் தெரியும். ஆகவே, காலனி கட்டிக் கொடுக்க தீவிர முயற்சி எடுத்து, அரிசன மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்டுக்கொண்டு இருக்கிறார். அவ்வளவுதான்.

திருப்பூர் மருத்துவமனையில் எமர்ஜென்சி பிரிவு ஏற்படுத்துதல்

*3338—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், திருப்பூரில் பேருந்து நிலையத்துக்கு எதிரில் உள்ள பழைய மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய எமர்ஜென்சி பிரிவு ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மருத்துவமனையில் தற்சமயம் 10 படுக்கைகளுடன் கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருவதால், 24 மணி நேர எமர்ஜென்சி பிரிவு ஒன்றை அங்கே அமைக்கும் அவசியம் எழவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மாவட்ட மருத்துவமனை பற்றி. இந்தப் புதிய மருத்துவமனை நகரத்தி லிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற காரணத்தால் நகரத்தின் மையப் பகுதியில் ஏற்கெனவே இருக்கிற பழைய மருத்துவமனையை, அது இப்போது கூட வெளி நோயாளிகளுக் கான பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. அந்தப் பழைய கட்டிடத்திலேயே 24 மணி நேர அவசர சிகிச்சைப் பிரிவாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரத்தின் வளர்ச்சியில் 4 கிலோ மீட்டர் தூரம் என்பது அதிகமான ஒரு தூரமல்ல. அங்கே இருப்பதை வேண்டுமானால் மாற்றலாம். அதை உறுப் பினர் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று கருதுகிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புதிய கட்டிடம் கட்ட வேண்டிய நிலையில் இல்லை ஏற்கெனவே கட்டிடம் இருக்கிறது. ஆகவே நகரத்தின் மையத் தில், நான்கு லட்சம் மக்கள் வசிக்கிற அந்த நகரத்தில், போக்கு வரத்து மிகவும் நெருக்கடியாக இருப்பதால், அடிக்கடி விபத்து ஏற்படுகின்ற அந்தப் பெருநகரத்தின் மத்தியில், இந்த அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். மருத்துவ மனையை மாற்ற வேண்டுமென்று இல்லை. புதிதாக 24 மணி நேரம் செயல்படக் கூடியதாக அதைத் தொடங்க வேண்டும். ஏற்கெனவே இந்த ஆண்டு அங்கே அப்படிப்பட்ட மருத்துவ மனை தொடங்கப்படும் என்று மருத்துவத் துறையிலிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. அதையும் அமைச்சர் அவர் கள் கவனத்தில் கொண்டு, அந்தக் கட்டிடத்திலேயே தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : கட்டிடம் மட்டும் இதற்குப் பிரச்சினை அல்ல. இப்போது புதிய மருத்துவமனையில், 3 உதவி மருத்துவர்கள், 3 செவிலியர்கள், 2 இயல் முறை வைத்தியர்கள், 2 டெக்னிசியன் கள், 3 உதவி செவிலியர்கள், நுண்கதிர் படம் எடுப்பவர் 3 பேர், உதவியாளர் ஒருவர் ஆகிய அனைவருமே 24 மணி நேரப் பணியாளர்கள்தான். ஆகவே ஒவ்வொரு மருத்துவமனையிலும்

1990 ஏப்ரல் 11]

அவசர சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்று கேட்டால் இந்த அரசின் நிதிநிலை அதற்கு இடம் கொடுக்காது. ஆகவே இருக்கின்ற வசதியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்ட மருத்துவமனை பற்றி. மாவட்ட மருத்துவமனை ஐ.சி. யூனிட் இல்லாமல் இயங்க முடியாது 10 படுக்கைகளும் இதற்கான ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். ஆனால் நான்கில் ஒரு பங்கு கூட அங்கே இல்லை. அதுவும் நான்கு மைல் தொலைவில். அந்த இடம் அந்த நகரத்தின் இதயத்தைப் போன்ற நடுப்பகுதி. அதில் ஆக்சிடெண்ட் கேஸ் ஏராளமாக ஏற்படுகிறது. ஆகவே அந்த இடத்தில் ஒரு ஐ.சி. யூனிட் ஏற்படுத்துவதால் அரசுக்குப் பணச் செலவு ஏற்படும் என்பது உண்மைதான். ஆனால் மிக மிகத் தேவையான நடவடிக்கை என்ற முறையில் அரசு கவனிக்குமா? மக்களுடைய கோரிக்கை என்ற அளவில் அதைக் கவனிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே இதுபோன்ற அவசர சிகிச்சைப் பிரிவை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அது எந்த அரசாலும் செயல்படுத்த முடியாத ஒன்றாகத்தான் இருக்கும்.

9-45 மணி

ஆகவேதான், மாவட்ட மருத்துவமனை இருக்கின்ற அதே ஊரிலே மற்றொரு ஐ.சி. யூனிட்டும் கேட்பது எந்த அளவிற்கு நியாயமானது என்பதை உறுப்பினரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் அந்த மருத்துவமனையிலேயே இரண்டு உடனடியாகச் செல்லக் கூடிய ஊர்திகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆம்புலன்ஸ் வசதிகளும் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட மருத்துவமனையினுடைய வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமே தவிர, நான்கு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற நகர மருத்துவமனைக்கும் இதைக் கேட்பது சரியாக இருக்காது என்றே கருதுகிறேன்.

குடி தண்ணீர் வழங்கும் திட்டம்

*3832—திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, அபிராமம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளுக்கும் உலக வங்கித்திட்டத்தின் மூலம் குடி தண்ணீர் வழங்கும் திட்டம் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?